1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரிலிருந்து ஆந்திர மாநில கரையோரப் பகுதிகள் வரை விறகு, உப்பு முதலியவை எடுத்துச் செல்ல இந்த படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே, கூவத்தைப்பற்றி நான் சொல்லிவிட்டேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, வேதாரண்யம், பக்கிங்காம் கால்வாய்களை இணைத்து படகு போக்குவரத்து அமைக்க வேண்டுமென்று முன்பு முடிவு செய்து அறிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் கொடுக்க இயலும்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மைய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக் கழகத்திடம் தமிழ் நாட்டில் நீர்வழி போக்குவரத்துக்கான தகுதி உள்ள திட்டம் தமிழக அரசு தந்துள்ளதா என்று கேள்வி இருக்கிறது. தமிழ் நாட்டில் ஆயிரம் கிலோமீட்டர் கடல் போக்குவரத்து உள்நாட்டில் இருப்பதின் காரணமாக கடல் வழி போக்குவரத்து பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து, இருக்கக்கூடிய ஆறுகள், கடலில் கலக்கக்கூடிய பகுதிகள் அண்டை மாநிலங்களோடு தொடர்புடையதாக இருக்குமானால் அதில் போக்குவரத்துப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான பதிலை சம்பந்தப்பட்ட அமைச்சர், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

சித்தமல்லி ஓடை நீர்த் தேக்கத் திட்டம்

*வினா எண். 449—திரு. பி. தங்கவேலு மற்றும் இரா. கருப்பையா: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டத்திற்காக அரசு ஒப்புதல் அளித்து இப் பணியை நிறைவேற்றுவதற்காக தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கு 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6-ஆம் நாள் அன்று அரசு ஆணையிட்டுள்ளது. விரைவில், இத் திட்டத்திற்கான பணிகள், துவங்கப்பெறும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் ஆற்றின் குறுக்கே ரூபாய் 240 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் கட்ட 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ஆம் நாளிட்ட அரசாணை எண் 1883-இல் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தால் 4,202.48 ஏக்கர் புஞ்சை நிலம் புதிதாக பாசன வசதி பெறும். 846.37 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் திட்ட வேலை எப்போது துவங்கும் ? இது வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தாலே, வறட்சி நிவாரண உதவிகள் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்கும் என்கிற காரணத்தாலே உடனடியாக இந்த திட்டம் வேலையைத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே திட்டத்திலே சேர்க்கப்பட்ட ஒரு பகுதி. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டிருக்கிறது. இன்றைக்கு நிதிப் பிரச்சினை இல்லை. இப்போது நிலுவுகிற வறட்சியைக் கருத்திலே கொண்டு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை அரசு ஒப்புக் கொள்கிறது. உடனடியாக மேலும் விரைவு படுத்தி அரசு நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே இந்தத் திட்டத்தை உருவாக்குகிறபோதே குடிநீர் வசதி அளிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை ஒரு பகுதியாக சேர்த்து இருக்கிறோம். எனவே அதை கருத்திலே கொள்ளும்பொழுது விரைவாக இந்தத் திட்டத்தை எடுத்து நடத்துவது நல்லது என்று அரசு உணர்கிறது. உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS